வதற்கு வசதியாக இருக்கிற காரணத்தினால், இது பிரதான சாலையில் அமைந்திருப்பதால், அங்கே ஒரு அடுக்குமாடி வணிக வளாகம் கட்டுவது சிறப்பாக இருக்குமென்று அரசு கருதுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன்அனுமதி யோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. வினா எண் 194, திரு. செ. து. வரதராஜன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

194—

சத்துணவு மையங்களுக்கு புதிய கட்டிடங்கள்.

* 4485—திரு. செ. து. வரதராஜன்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) சத்துணவு மையங்கள் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய கட்டிடங்களை கட்டித் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உரிய நடவடிக்கை, தேவையான இடங்களில் எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 195. திரு. இரா. தாமரைக்கனி. இருக்கையில் இல்லை.

வினா எண் 196; டாக்டர் ச. ஆரோக்கியசாமி. திரு. ப. கலியபெருமாள். மாண்புமிகு ஆதி திராவிட நலத் துறை அமைச்சர்.

196 —

கிறித்துவ ஆதி திராவிடர்களுக்கு சலுகைகள்.

* 3238—டாக்டர் ச. ஆரோக்கியசாமி:

திரு. ப. கலியபெருமாள்:

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;